ஸ்ரீ :

# திருமழிசைப்பிரான் திருமஞ்சனக்கட்டியம்

புண்ட்ரைர் த்வாதசபிர் யதாவிதி த்ருதைச் சுப்ரைரதப்ரச்சவி:
தத்தாத்ருக்சரதம்புவாஹபடலீஸௌந்தர்யஸம்பந்நிதி:
தீபக்த்யாதிகுணௌக ஸம்ப்ருதயசஸ்ஸந்தோஹஸந்தேஹதா
மூர்த்திஸ் ஸா மம பக்திஸாரயமினோ ஜாகர்த்து சித்தே ஸதா.

1 நல்லார்நவில்கின்ற நன்மழிசைமாநகரில் நலமாக நாமுய்ய வந்த பெருமான்,

2 நன்னாரணன்நீங்க மற்றுருமுற்றதுணையன்றே நமக்கென்றுரைத்தபெருமான்,

3 கல்லாதவாதிகளு மல்லாதமாயிகளும் நில்லாதுநீக்கியருள் நல்லபெருமான்,

4 கலைவலவர்பலர்வாழுங் கச்சியில் வெஃகாவில் கோயில்கொண்டடியாரையருளும் பெருமான்,

5 தையில்மக மின்றென்று தாரணியோரேற்றமதாச் செய்யமனஞ் செழிப்புற்றுச் சீர்தூக்குஞ் சிறப்புடையோய்!

6 துய்யமதிபெற்ற மழிசைப்பிரான்பிறந்த நாளென்று நற்றவர்கள் கொண்டாட வந்துதித்தோய் !,

7 கருச்சந்துங் காரகிலுங் கமழ்கோங்குமணநாறும் திருச்சந்தத்துடன்மருவு திருமழிசை நகரரசே !,

8 உலகினையும் மழிசையையு மொருகோலாலுயர்தூக்க வசிதானபக்கமதாம் மழிசை நகர் வந்துதித்தோய் !

9 ஒருபிறவிதன்னிலே யிருபிறவியானமையால் உலகுண்டவாயனுடன் ஒப்படையு முயர் குலத்தோய் !

10 சார்வாகபௌத்தமத லோகாயதாதிகளில் கால்தாழ்ந்து நூல்பலவுமிட்ட மிகுஞானத் தோய் !

11 பேயாழ்வார் பேரருளால் பரதத்வநிலைதேர்ந்து மாயாமதத்தனை மாய்த்தொழித்த மதிக்கடலே !

12 வரந்தருவேனெனவந்த அரன்செருக்கை யடிக்கண்ணால் துரந்தொழியச் செய்தருளும் மிகுஞானச்சிறுகுழவீ !

13 ஊசிசெலும் வழியூடே நூல்தானுஞ் செல்கவென்று உரைத்தருளி உருத்திரனார்க் கொளியொழித்தவொண்சுடரே !.

14 * க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணா மித்யாதி வேதத்தை நெல்லுரியால்நிலைவித்த நிறைஞான மூர்த்தியினாய் !

15 பெரும்புலியூரடிகள்பால் பெரும்பூஜைபெற்றருளிக் குடந்தைநகர் குடிகொண்டு யோக வகையாராய்ந்தோய் ?

16 பொய்கைமுனி பூதம் பேயாழ்வார்கள் மூவருடன் திருவல்லிக்கேணிதனில் திகழ்ந் துறைந்த நிகழ்தவத்தோய் !

17 சிந்தாமற்கொண்மினீர் தேர்ந்தெனவேயாழ்பொருளை அந்தாதிமேலிட்டு அறிவித்த அருள்முகிலே !

18 திருச்சந்தப்பொழில்தழுவு தாரணியின் துயர்தீரத் திருச்சந்த விருத்தஞ்செய் திருமழிசைப்பரஞ்சுடரே !

19 நெறிநின்ற கணிகண்ண னடிநண்ணிமகிழ்வண்ணம் அருள்நண்ணியருங்கலைகள் ஆய்ந்துரைத்த அருங்கலமே !

20 சீரார்மொழிசெப்பி வாழலாம்நெஞ்சமேயென் றோராருலகெல்லாமுகந்திடவே வந்துதித்தோய் !

கலைமாகவண்ணலே ! நல்லெண்ணெய் மஞ்சளால் நன்மஞ்சனங்
கொண்டு நாடோறும் வாழ்கவே.